சுருக்கம்

சிறுபான்மையினர் நலன் – கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் – உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் பணிபுரிவதற்கான சான்றிதழைப் பெறுவதற்கான வழிமுறைகளில் திருத்தம் செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (சிநஆபி1) த்துறை

அரசாணை (நிலை) எண்.16 நாள் 31.01.2024

திருவள்ளுவர் ஆண்டு 2055

சோபகிருது, தை –17

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண்.39, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 25.05.2022.
2. அரசாணை (நிலை) எண்.9, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 18.01.2023.
3. சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநரின் கடித எண்.பி1/ 2861/2021, நாள் 08.12.2023.

*********

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்களின் சமூக பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டிற்கான நல வாரியம் புதிதாக அமைப்பதற்கு நிர்வாக ஒப்புதல் அளித்து ஆணையிடப்பட்டது. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மேற்படி நல வாரியத்தில் உறுப்பினர்கள் பதிவு செய்வது, பணிபுரியும் சான்றிதழ் பெறுவது, அவர்களுக்கு அடையாள அட்டை வழங்குவது, பதிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கான வழிமுறைகள், விண்ணப்பப் படிவங்கள், விண்ணப்பிக்கும் முறை குறித்த வழிமுறைகள் மற்றும் படிவங்கள் தொகுப்பு வெளியிடப்பட்டது.

2. தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்வதற்கு, கிராம நிர்வாக அலுவலர் / வருவாய் ஆய்வாளரால் (சென்னை மாவட்டம்) பணிச் சான்றிதழ் வழங்குவதற்கு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை ஆணை வெளியிட்டுள்ளது. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், சிறுபான்மையினர் நல இயக்குநர், இதே நடைமுறையை கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்களாக சேருவதற்கும் பின்பற்றலாம் என்றும், அதற்காக இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தகுந்த திருத்தம் செய்து ஆணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. 09.01.2024 அன்று நடைபெற்ற சிறுபான்மையினர் நலன் குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

> "உபதேசியார்கள் நல வாரியத்தில் உறுப்பினர்கள் பதிவு செய்வதற்கான நிபந்தனைகள் தளர்வு செய்யப்பட்டு அது இம்மாத இறுதிக்குள் தொடங்கப்படும்."

4. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பைச் செயற்படுத்தும் விதமாக, சிறுபான்மையினர் நல இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு கவனமுடன் பரிசீலனை செய்து, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள, கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தின் "நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கான வழிகாட்டி நெறிமுறைகளில்" வரிசை எண்.2-இல் குறிப்பிடப்பட்டுள்ள பத்தி ஒன்றிற்குப் பதிலாக, உறுப்பினர் பதிவுக்கு விண்ணப்பிக்கும் வழிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள, பணிபுரியும் சான்றிதழ் பெறுவது மற்றும் சான்றிதழை சரிபார்த்து உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்குவது குறித்து பின்வரும் திருத்தம் வெளியிடப்படுகிறது:-

<u>திருத்தம்</u>

"கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினர் பதிவுக்கான விண்ணப்பத்தினை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரிடமிருந்து பெறலாம். விண்ணப்பிப்பவர், இந்நல வாரிய உறுப்பினராக பதிவு பெறத் தகுதியுடையவர் என்பதற்கு ஆதாரமாக அவர் பணிபுரியும் கிறித்தவ தேவாலயத்தின் நிர்வாகி அல்லது கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் (சென்னை மாவட்டம்) ஆகியோரிடமிருந்து சான்றிதழ் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலருக்கு அனுப்ப வேண்டும். சான்றிதழுடன் பெறப்படும் விண்ணப்பங்கள் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரால், இணைய வழியில் கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் (சென்னை மாவட்டம்) மூலம் ஒருமாத காலத்திற்குள் சரிபார்க்கப்படும். பின்னர் உறுப்பினர் அடையாள அட்டை வழங்கப்படும்."

5. மேலே பத்தி 4-இல் உள்ள நடைமுறையைப் பின்பற்றி கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினர் சேர்க்கைக்கான விண்ணப்பங்களைப் பெற்று, மேலே முதலாவதாக மற்றும் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் தெரிவிக்கப்பட்ட வழிமுறைகளின்படி உறுப்பினர் சேர்க்கை மற்றும் நலத்திட்ட உதவிகளை செயல்படுத்துமாறு சிறுபான்மையினர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரீட்டா ஹரீஷ் தக்கர்
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர்,
சிறுபான்மையினர் நலன், சென்னை-5.
உறுப்பினர்-செயலர்,
தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம், சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலர்கள்,
சென்னை, வேலூர், விழுப்புரம், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி.
மாநில கணக்காயர், சென்னை-18.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ்
தமிழர் நலத்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை-9.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,
சென்னை-9.
நிதி (பி, மிபி (ம) சிந) துறை, சென்னை-9.
அரசு செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச் செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

31/1/24
பிரிவு அலுவலர்.